Nestlé Good food, Good life

# பத்திரிகை வெளியீடு

கொழும்பு, ஒக்டோபர் 24, 2021

**நெஸ்லே லங்கா பீஎல்சி நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராக ஜேசன் அவன்சென்யா நியமிக்கப்பட்டுள்ளார்.**

2021 ஒக்டோபர் 1 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில், நெஸ்லே லங்கா பீஎல்சி நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராக ஜேசன் அவன்சென்யா அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன், இலங்கை மற்றும் மாலைதீவில் நெஸ்லே நிறுவனத்தின் செயல்பாடுகளுக்கு அவர் தலைமை வகிக்கவுள்ளார். இதற்கு முன்னர் முகாமைத்துவப் பணிப்பாளராக கடமையாற்றிய ∴பேப்ரிஸ் காவலீன் அவர்களிடமிருந்து அவர் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளதுடன், ∴பேப்ரிஸ் காவலீன் அவர்கள் ஆசியா, ஓசானியா மற்றும் ஆபிரிக்காவுக்கான பிராந்திய முகாமைத்துவ அணியின் அங்கத்தவராக சுவிட்சலாந்திற்கு இடம்மாறியுள்ளதுடன், நெஸ்லே ஊட்டச்சத்து வணிகத்தை நிர்வகிக்கவுள்ளார்.

பாலை மூலமாகக் கொண்ட தயாரிப்புக்கள் மற்றும் ஊட்டச்சத்து ஆகியவற்றில் வலுவான பின்னணியுடன், பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, சுவிட்சலாந்து மற்றும் பாகிஸ்தானில் நெஸ்லே நிறுவனங்களில் 24 வருட கால அனுபவத்துடன் ஜேசன் அவர்கள் நெஸ்லே லங்கா நிறுவனத்தில் இணைந்துள்ளார். நெஸ்லே லங்கா நிறுவனத்தின் உயர் பதவியைப் பொறுப்பேற்றுக் கொள்வதற்கு முன்பு, ஜேசன் அவர்கள் நெஸ்லே பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானில் ஊட்டச்சத்து மற்றும் பாலை மூலமாகக் கொண்ட தயாரிப்பு வணிகங்களுக்கான வணிக நிர்வாக அதிகாரியாக கடமையாற்றியுள்ளார். இங்கு அவர் தயாரிப்புத் துறை முகாமைத்துவம், புத்தாக்கம், டிஜிட்டல் மேன்மை மற்றும் வலுவான அணி மேம்பாடு ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க வணிக விரைவுபடுத்தலை வழிநடாத்தியுள்ளார். அவர் அமெரிக்காவின் Fordham University Graduate School of Business இல் வணிக நிர்வாகத்தில் முதுகலைப் பட்டமும், பிலிப்பைன்ஸின் De La Salle University இல் பயன்பாட்டு பொருளாதாரத்தில் இளங்கலைப் பட்டமும் பெற்றுள்ளார்.

---

**தொடர்புகளுக்கு:**

| | | | |
|---|---|---|---|
| நிறுவன பொது விவகாரங்கள் | தமித குலதுங்க | +94777915949 | Damitha.Kulatunga@lk.nestle.com |